**16.10.2025**

**MCOP.No.138/2023**

**ம.சா. 1: காளிதாஸ்**

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் விபத்து சமயத்தில் 2-ம் எதிர்மனுதாரர் சாந்தியின் மோட்டார் சைக்கிளை இரவல் வாங்கி ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். இந்த விபத்து வெள்ளாளப்பட்டி இடுகாட்டின் அருகே நடைபெற்றது. நான் சாலை ஓரம் இடது ஓரம் நிதானமாகத்தான் வாகனத்தை ஓட்டி சென்றேன். அப்போது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து நான் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டது. விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளேன்.

2) அதன் அடிப்படையில் தான் ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரிதான். எனவே எனக்கு 1ம் எதிர்மனுதாரர் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். எனவே 2,3ம் எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் வாகன உரிமையாளரிடம் இருந்து வாகனத்தை வாங்கி ஓட்டியதால் நானும் ஒரு வாகன உரிமையாளர் என்று ஆவதால் அதனால் மேற்படி 3 ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எந்த வித இழப்பீடும் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமாகிவிட்டதால் எனக்கு எவ்வித ஊனக்குறைபாடு இல்லை என்றும் வருமான இழப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது வருமானம் தொழிலை காண்பிக்ககூடிய ஆவணங்கள்

எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடுகள் மிக அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.16 17:37:43 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**